# ஜெயஸ்ரீ பயோடெக்

## ஜெயஸ்ரீ பயோடெக்-ன் சிறப்பு அம்சங்கள்

★ ஜெயஸ்ரீ பயோடெக் நிறுவனம் கடந்த 2008-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநிலம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் நகரில் இயங்கி வருகிறது.

★ வருடத்திற்கு சுமார் 30 இலட்சம் தரமான நோயற்ற அதிக விளைச்சல் தரக்கூடிய திசு வாழைக் கன்றுகளை உற்பத்தி செய்து இந்தியாவின் அனைத்து பகுதிகளுக்கும் விநியோகம் செய்து வருகிறது.

★ இந்திய அரசாங்கத்தின் (ஈஆப) அங்கீகாரம் பெற்ற நிறுவனம். விநியோகம் செய்யும் ஒவ்வொரு செடியும் ெ தாகுதி எண் உள்ளடிக்கியது.

★ முற்றிலும் பசுமை குடிலில் செடிகளை வளர்த்து உலகத்தரம் வாய்ந்த செடிகளை விநியோகம் செய்யும் தென் இந்தியாவின் ஒரே நிறுவனம்.

JAYASREE BIOTECH

★ 25 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவம் வாய்ந்த, நல்ல தகுதி வாய்ந்த பட்டதாரி நிபுணர்களை கொண்ட ஒரே நிறுவனம்.

★ விவசாயிகளின் சேவையில் முக்கியத்துவம்.

★ தரத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து விவசாயிகளின் மனதில் இடம் பிடித்த நிறுவனம்.

★ விநியோகம் செய்யும் ஒவ்வொரு செடியும் இந்திய அரசாங்கத்தின் தரச்சான்றிதழ் முத்திரை பெற்றது.

## திசுவளர்ப்பு வாழை சாகுபடி குறிப்புகள்

நல்ல தரமான அதிகப்படியான விளைச்சலை அடைவதற்கு ஜெயஸ்ரீ பயோடெக்-ன் நல்ல தரமான நோயற்ற திசுவளர்ப்பு வாழைக் கன்றுகளை பயிரிடுவதே சாலச் சிறந்தது.

**திசுவளர்ப்பு வாழையின் நன்மைகள்:**

★ விநியோகிக்கப்படும் தருவாயில் முற்றிலும் நோயற்றவை.
★ ஒரே சீரான வளர்ச்சி மற்றும் அதிக மகசூல் தரக்கூடியது.



★ அதிகப்படியான வேர்களைக் கொண்டு வீரியத்துடன் வளரக்கூடியவை.

★ வருடம் முழுவதும் திசுவளர்ப்பு வாழைக் கன்றுகள் நடவு செய்வதற்கு கிடைக்கும்.

**இரகங்கள் :**

★ **கிராண்ட் நெய்ன்**
★ **நெய் பூவன் (எலக்கி)**
★ **நேந்திரன்** (சாதா மற்றும் குயிண்டால்)
★ **செவ்வாழை**
★ **வில்லியம்ஸ்**
★ **கற்பூரவள்ளி**

**மண்:**

நல்ல வடிகால் வசதி, கார அமிலத் தன்மை 6.5 முதல் 7.5 வரை உடைய செம்மண் மற்றும் வண்டல் கலந்த மண் ஏற்றது. களர், உவர், அதிக நீர்ப்பிடிப்பு நிலங்களில் வாழை பயிரிடுவதை தவிர்க்கவும்.

**நிலம் தயார் செய்தல் :**

இரண்டு முதல் மூன்று முறை நன்கு ஆழமாகவும், கட்டிகள் இல்லாமலும் உழவு செய்து 1.5அடி நீளம் X 1.5அடி அகலம் X 1.5அடி ஆழம் என்ற அளவில் குழி எடுக்க வேண்டும்.

**இடைவெளி :**

| | |
|---|---|
| கிராண்ட் நெய்ன் | 6அடி 6அடி (1200 செடி / ஏக்கர்) |
| நெய் பூவன் (எலக்கி) மற்றும் | 7அடி 6அடி (1037 செடி / ஏக்கர்) |
| சாதா நேந்திரன் | 6அடி 7அடி (1050 செடி / ஏக்கர்) |
| குயிண்டால் நேந்திரன் | 6அடி 7அடி (890 செடி / ஏக்கர்) |
| செவ்வாழை | 8அடி 7அடி (780 செடி / ஏக்கர்) |

**அடி உரம் (மரம் ஒன்றுக்கு) :**

| | |
|---|---|
| நன்கு மக்கிய தொழு உரம் | : 10 கிலோ |
| வேப்பம் புண்ணாக்கு | : 250 கிராம் |
| சூப்பர் பாஸ்பேட் | : 25 கிராம் |

| உரமிடும் தருணம் : உரத்தின் அளவு : மரம் ஒன்றுக்கு கிராமில் | | | | | |
|---|---|---|---|---|---|
| நடவு செய்த பின் | டி.ஏ.பி. | யூரியா | மியூரேட் ஆப் பொட்டாஷ் | மெக்னீசியம் சல்பேட் | சின்க் சல்பேட் |
| 30வது நாள் | 50 | 25 | 25 | --- | --- |
| 60வது நாள் | 60 | 50 | 50 | --- | --- |
| 90வது நாள் | 60 | 50 | 75 | --- | --- |
| 105வது நாள் | --- | --- | --- | 20 | 5 |
| 120வது நாள் | --- | 50 | 100 | --- | --- |
| 135வது நாள் | --- | --- | --- | 20 | 5 |
| 150வது நாள் | --- | 50 | 100 | --- | --- |
| 165வது நாள் | --- | --- | --- | 20 | 5 |
| 180வது நாள் | --- | 50 | 150 | --- | --- |
| 210வது நாள் | --- | 50 | 150 | --- | --- |
| 240வது நாள் | --- | 25 | 150 | --- | --- |
| 270வது நாள் | --- | --- | 100 | --- | --- |
| **மொதம்** | **170** | **350** | **900** | **60** | **15** |

JAYASREE BIOTECH

**பின் செய் நேர்த்தி :**

★ களைகளை அவ்வப்போது நீக்க வேண்டும்.

★ பக்கக் கன்றுகள், காய்ந்த இலைகள் மற்றும் சருகுகளை அவ்வப்போது நீக்கி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

★ வெயில் மற்றும் குளிர் காலங்களில் வாழைத் தாரை, வாழை தார் பை அல்லது காய்ந்த வாழை இலைகளைக்கொண்டு மூடி பாதுகாக்க வேண்டும்.

## பயிர் பாதுகாப்பு

### 1 பூச்சிகள்

**1. கிழங்கு கூன் வண்டு :**

அறிகுறிகள் :

கிழங்கு மற்றும் வேர்களை துளைத்து உள்ளே சென்று அதிக சேதம் ஏற்படுத்தும்.



கட்டுப்படுத்தும் முறைகள்:

குளோரிபைரிபாஸ் 20 EC மருந்தை ஒரு லிட். நீரில் 2.5 மில்லி வீதம் கலந்து வாழை மரத்தின் தூரைச் சுற்றியுள்ள மண்ணில் ஊற்றி நனைக்கவும்.

**2. நூற்புழுக்கள் :**

அறிகுறிகள் :

வேரின் மேல்புறம் சிகப்பு , கருப்பு நிறக்கோடுகள், வேர்முடிச்சுகள்.

**கட்டுப்படுத்தும் முறைகள் :**

கார்போபியூரான் 3ஜி என்ற குருணை மருந்தை மரம் ஒன்றுக்கு 10 கிராம் வீதம் நடும்போது, அதன் பின்பு 3 மற்றும் 6ம் மாதங்களில் 20 கிராம் வீதம் இடவும்.

**4. காய்ப்பேன் (திரிப்ஸ்)**

அறிகுறிகள் :

காய் மற்றும் பழங்களின் தோல் பகுதியில் பொலிவு மங்கி துரு பிடித்தது போன்று.

கட்டுப்படுத்தும் முறைகள் :

மானோகுரோட்டாபாஸ் மருந்தை 1 லிட். நீரில் 2.5 மில்லி (அல்லது) இமிடாகுளோப்ரிட் மருந்தை 1லிட் நீரில் 0.5 மில்லி வீதம் கலந்து தெளிக்கவும்.

**5. தண்டுதுளைப்பான்**

அறிகுறிகள் :

புழுக்கள் துளையிட்ட வாழைத்தண்டின் துவாரங்களில் இருந்து பசை போன்ற வாழைச்சாறு வடியும்.

கட்டுப்படுத்தும் முறைகள் :

தண்டுப்பகுதியில் 2.5 மில்லி மானோகுரோட்டோபாஸ் மருந்து கரைசலை (150 மில்லி மருந்தை 350 மில்லி நீரில்) ஊசி மூலம் தண்டுப் பகுதியில் செலுத்தி கட்டுப்படுத்தலாம்.

## நோய்கள்

**1.பாக்டீரியா கிழங்கு அழுகல் நோய் (எர்வினியா):**

அறிகுறிகள் :

கிழங்குப்பகுதி அழுகி இலைகள் தீயால் சுட்டதுபோல் காய்ந்து காணப்படும். குறுத்து இலை காயந்து லேசாக இழுக்கும் போது கையோடு வந்து விடும்.

கட்டுப்படுத்தும் முறைகள் :

டிரைகோடெர்மா சூடோமோனாஸ் கலந்து மண்ணில் இடவும். வெயில் காலத்தில் மாலை வேளையில் நடவு நல்லது.

**2. சிகாடோகா இலைப்புள்ளி நோய் :**

அறிகுறிகள் :

இலைகளில் நீள்வட்ட அல்லது கண்வடிவ பழுப்பு நிற புள்ளிகள் காணப்படும். இதன் தாக்குதலால் சில சமயங்களில் காய்கள் முதிர்வது தடைபட்டு பிஞ்சுக் காய்கள் பழுக்க ஆரம்பித்து விடும். அடி இலையில் ஒன்றிரண்டு புள்ளிகள் தென்பட்ட உடன் 1லிட் நீரில் நேட்டிவோ மருந்தை 0.5 கிராம் வீதம் அல்லது ரோக்கோ மருந்தை 1.5 கிராம் வீதம் அல்லது டில்ட் 1மில்லி + ரோக்கோ 1கிராம் வீதம் தெளிக்கவும்.

JAYASREE BIOTECH

**4. வைரஸ் நோய்கள்**

**அ) வாழை முடிக்கொத்து நோய் :**

அறிகுறிகள் :

இலைகள் சிறுத்து ஈட்டி வடிவத்திலும் மற்றும் இலைக்காம்புகள் சிறுத்து கொத்தாக காணப்படும். இது ஏபிட்ஸ் என்ற அசுவினி பூச்சி வாயிலாக ஒரு மரத்தில் இருந்து மற்ற மரங்களுக்கு எளிதில் வேகமாக பரவும்.

கட்டுப்படுத்தும் முறைகள் :

அனைத்து வைரஸ் நோய்களுக்கு முற்றிலும் பரிசோதிக்கப்பட்ட, நல்ல தரமான ஜெயஸ்ரீ பயோடெக்கின் திசு வளர்ப்பு செடிகளை நடவு செய்தல் மூலம் தடுக்கலாம்.

இமிடாகுளோப்ரிட் மருந்தை 1லிட் நீரில் 0.5 மில்லி கலந்து தெளித்து இந்நோயை பரப்பும் அசுவினி பூச்சியை கட்டுப்படுத்தி இதன் பரவுதலை தடுக்க முடியும்.



**2. தேமல் நோய் :**

அறிகுறிகள் :

இலைகளில் வெளிரிய பச்சை நிறத்திலோ அல்லது மஞ்சள் நிறத்திலோ திட்டுகளாகவும், கோடுகளாகவும் காணப்படும்.

கட்டுப்படுத்தும் முறைகள் :

நோய் தாக்கிய மரத்தினை பிடுங்கி அழித்து விடுதல். தக்காளி, பூசணி மற்றும் வெள்ளரிக்காய் ஆகியவற்றை ஊடுபயிர்களாக வளர்ப்பதை தவிர்க்கவும்.

## அறுவடை செய்தல்

வாழைத்தார் வெளிவந்த 100 முதல் 110 நாட்கள் சென்றபின் அறுவடை செய்யலாம்.

**முக்கிய குறிப்பு** : மேலே கூறிய சாகுபடி குறிப்புகள் அனைத்தும் எங்களது ஆராய்ச்சி வயல் பரிசோதனை முடிவுகள் ஆகியவற்றைக் கொண்டு மிகுந்த கவனத்துடன் தரப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இவை அனைத்தும் இடம் இரகம் மற்றும் நடவுப்பருவம் ஆகியவற்றைப் பொருத்து மாறுதலுக்கு உற்பட்து என்பதை தெரியப்படுத்தி கொள்கிறோம்.

தரமான செடிகள் மற்றும் ஆலோசனைகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**ஜெயஸ்ரீ பயோடெக்**

எண். 1/6-2, தொரப்பள்ளி ரோடு, ஒன்னல்வாடி,
ஒசூர் - 635 109, கிருஷ்ணகிரி மாவட்டம்.
**V.P. செந்தில்குமார்,** B.Sc., (Agri) MBA., செல் : 09448045745
மின்அஞ்சல் : vpskumar95@yahoo.co.in